திருநெல்வேலி
வெள்ளி ● டிசம்பர் 7 2018
www.dinamalarnellai.com
தினமலர் நெல்லை

# பாளை., சாரதா கல்லூரியில் புத்தாக்க பயிற்சி முகாம்

திருநெல்வேலி, டிச. 7–

பாளை., சாரதா கல்லூரியில் புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது.

பாளை., சாரதா கல்லூரியில் மாணவிகளின் தன் முனைப்பு திறனை மேம்படுத்தும் வகையில் பல் வேறு துறை சேர்ந்த உதவி பேராசிரியர்கள் பல்வேறு தலைப்புகளில் வகுப்புகள் நடத்துகின்றனர். புத்தாக்க பயிற்சியின் சிறப்பம்சமாக ஸ்டெர்லைட் நிறுவனம் மாணவிகளுக்கான தன்முனைப்புத் திறன் பயிற்சியை காணொலி காட்சி மூலம் நடத்தியது.

கல்லூரி நிர்வாகி பக்தானந்தா சுவாமிகள், செயலர் யதீஸ்வரி சரவணவப்ரியா அம்பா ஆசி வழங்கினர். முதல்வர் மலர்விழி அறிமுக உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினர்களாக ஸ்டெர்லைட் நிறுவனத்தை சேர்ந்த நாராயண மூர்த்தி, கோவிந்தசாமி, ஸ்ரீதர், சாய் சுந்தர், ராஜேஸ்வரி கலந்து கொண்டு, மாணவிகளிடம் கலந்துரையாடினர். மாணவி மகாராஜ லட்சுமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பேராசிரியை கானசரஸ்வதி நன்றி கூறினார். ஏற்பாடுகளை தகவல் தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் இந்திரா மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.